**கவனிக்க.**- 2017.10.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2033 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13

2033 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1576 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**கவனிக்க.**- (i) உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம் 2017, செத்தெம்பர் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்ட மூலம் 2017, ஒற்றோபர் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்ட மூலம் 2017, ஒற்றோபர் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1575- B81216 - 5,403 (2017/10)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - வடமேல் மாகாணம்**

*வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை*

1.0 வடமேல் மாகாண அரச சேவையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட, இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி திறமை அடிப்படையில் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், பொது நிர்வாக சுற்று நிருபம் 15/90 இன் அடிப்படையில் வடமேல் மாகாணத்திற்குரிய மாவட்ட சனத் தொகை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு வடமேல் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

3.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையை அல்லது வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கையை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரித்துடையதாகும்.

4.0 **சம்பளம்**.- 2016.02.25 ஆந் திகதியுடைய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆகிய தரங்களுக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 28,940-10 x 300, ரூபா 11 x 350 - 10 x 560-10 x 660 - ரூபா 47,990 என்பதாக அமைவதுடன், அந்த சம்பளம் உங்களுக்குக் கிடைப்பது 2020.01.01 ஆந் திகதியில் இருந்தாகும் மேற்கூறிய சுற்று நிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி நியமனம் வழங்கப்படும் திகதியில் இருந்து சம்பளம் வழங்கப்படும் (ரூபா 31,940 இனைத் தாண்டிச் செல்வதற்காக II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறவும், ரூபா 35,790 இனைத் தாண்டிச் செல்வதற்கு I ஆம் தரத்திற்கு பதவி உயர்வும் பெற்றுக் கொள்ள வேண்டும்)

5.0 இப்பதவி நிரந்தரமானது, இந்த பரீட்சையின் மூலம் பொது நிர்வாக சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஒய்வூதியம் ஓய்வூதிய முறைமை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

5.1 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டாகும். அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து 3 வருடங்களுக்குள் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

5.2 பொது நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் சேவையில் இணைந்து 5 வருடங்களுக்குள் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகள் தொடர்பில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

6.0 **தகைமைகள்**.- வடமேல் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தின் பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவதற்கு கீழ் வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :-

(அ) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்ட இலங்கையராக இருத்தல்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்குக் குறையாமலும், முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அதன்படி 1999.11.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.11.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டிருப்பின் மாத்திரம் விண்ணப்பிப்பதற்குத் தேவையான வயது தொடர்பான தகைமைகள் பூர்த்தி செய்யப்படும்.)

(இ) நற்பண்புடையவராக இருக்க வேண்டும்.

(ஈ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(1) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே அமர்ல் சித்தி பெற்றிருத்தல். பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய தகைமைகளை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

7.0 (அ) மாவட்ட சனத் தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் தெரிவு செய்தல்.
சேவையில் இணைத்துக் கொள்ளல் விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ளப்படும். வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வருகின்ற ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் சனத்தொகையின் விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் உரிய வெற்றிடங்களின் அளவு நிர்ணயிக்கப் படும். ஏதேனும் ஒரு மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதற்கு தகுதி பெறுவது அந்த மாவட்டத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரமே.

(i) ஏதேனும் ஒரு மாவட்டத்தில் மேற்கூறியவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்தில் இருந்து விண்ணபித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்ப முடியாத போது அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை அண்மையில் உள்ள மாவட்டத்திற்கு வழங்கப்படும்.

(ஆ) மாவட்டத்திற்கு உரித்தாவதற்காக கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்.
மாவட்டம் ஒன்றின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு உத்தேசிப்பாராயின் பின்வரும் விடயங்களில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) பரீட்சைக்கான தகுதியை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு அண்மிய ஐந்து (05) ஆண்டுகளில் அவர் குறைந்த பட்சம் மூன்று (03) வருடங்களேனும் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்திருக்க வேண்டும்.
அவ்வாறில்லையாயின்,

(ii) அவர் குறித்த மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஐந்து (05) வருடங்கள் இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி மேற்கூறிய (ஆ) (ii) இன் கீழ் தகுதியைப் பெற்றிருப்பாராயின் அவர் உரித்துடைய மாவட்டத்தை உறுதிப் படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை வேண்டும் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**குறிப்பு** – (1) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரியின் தாய் அல்லது தந்தை அரச சேவையில், மாகாண அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் இடம் மாற்றப்படக் கூடிய சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த விண்ணப்பதாரிக்கு தமது தாய் அல்லது தந்தையின் பிறந்த பிரதேசத்தை தனக்கு உரித்தாகும் மாவட்டமாக தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரி தமது பெற்றோரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை முன் வைக்க வேண்டும்.)

(2) எந்தவொரு விண்ணபதாரிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. தாம் அதிகம் விரும்பும் மாவட்டம் எது என்பது ஒரு முறை குறிப்பிட்ட பின்னர் அதை மாற்றுவதற்கு முடியாது.

8.0 **பரீட்சை ஒழுங்கு முறை :**

(அ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தனக்குரிய ஒரு மொழி மூலத்தை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் பரீட்சைக்கு உரிய சகல வினாப் பத்திரங்

களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை இரு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| ***வினாப் பத்திரம்*** | ***புள்ளிகள்*** | ***காலம்*** |
|---|---|---|
| 1. மொழித் திறன் | 00 புள்ளிகள் | 2 1/2 மணித்தியாலங்கள். |
| 2. பொது உளச் சார்பு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம். |

**மொழித் தேர்ச்சி –** இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கருத்து வெளிப்பாடு, கிரகித்தல், எழுத்து வரி அறிவு, மொழி மற்றும் கட்டுரை, வழங்கப்படும் கடிதத்தை உருவாக்குதல், வழங்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் வரைபுகளை உருவாக்கல், வழங்கப்பட்டுள்ள பந்தியின் சுருக்கத்தை எழுதுதல், வழங்கப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் பொருளை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பிரயோகம் போன்றவை தொடர்பிலான அறிவைப் பரிசீலிக்கும் விடயம் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**பொது உளச் சார்பு –** இந்த வினாப் பத்திரம் விண்ணப்பதாரிகளின் எண் அறிவு, தர்க்கத் திறன், பொது அறிவு என்பவற்றை மதிப்பீடு செய்யும் விதமாக தயாரிக்கப்படும் விடயம் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியது. பல்தேர்வு மற்றும் குறுகிய விடை வழங்கும் மாதிரியிலான 50 வினாக்களை உள்ளடக்கியது என்பதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு :-**

1. பதவிக்கான விண்ணப்பதாரிகளின் தகைமை மற்றும் ஆற்றலைப் பரீட்சிக்கும் நோக்கில் இந்த வினாப் பத்திரம் தயாரிக்கப்படும்.
2. எல்லா வினாப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள் என்பவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

இது ஒரு போட்டிப் பரீட்சையாயினும், நியமனம் பெற்றுக் கொள்ளும் தகுதியைப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் தலா 40 (40%) புள்ளிகளை விண்ணப்பதாரிகள் பெற்றுக் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளாக ஐம்பது (50%) புள்ளிகளையாவது பெற்றிருக்க வேண்டும். போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசை கடுமையாகப் பின்பற்றப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

9.0 தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை - விண்ணப்பத்தை நிரப்புகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். பரீட்சையின் சட்டதிட்டங்களின் அடிப்படையில் விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவராக இனம் காணப்படின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யலாம்.

10.0 சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணமாக 600 ரூபா (ரூ. 600/) ஐ பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் அரசின் வருமானத்தில் வரவு வைக்கப்படுமாறு இலங்கையில் உள்ள எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகம் ஒன்றில் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச் சீட்டின் ஒரு விளிம்பை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றை எதிர்காலப் பயன்பாட்டுக்காக தம் வசம் வைத்திருக்கவும்.) அவ்வாறு காசு செலுத்தி விண்ணப்பதாரிகளின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச் சீட்டு தவிர்ந்த வேறு நிறுவனங்களில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டுக்களோ, காசுக் கட்டளைகளோ, முத்திரைகளோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், எந்தவொரு காரணத்திற்காகவும் செலுத்தப்பட்ட பணம் மீள அளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்த ஒரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

11.0 **விண்ணப்பம் .-** இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப A4 ( 21 செ.மீ x 29 செ. மீ ) அளவுள்ள தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி -

(அ) இலக்கம் 1 தொடக்கம் 3.1 வரை முதலாவது பக்கத்திலும் ;

(ஆ) இலக்கம் 3.2 தொடக்கம் உள்ளவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கக் கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் போடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தின் 1.1 இன் கீழ் விண்ணப்பதாரியின் பெயர் குறிப்பிடப்படும் போது விண்ணப்பதாரியின் பெயரில் கடைசியாக வரும் பெயரை முதலில் எழுதி, குடும்பப் பெயரிற்கு உரிய பெயர்களின் முதல் எழுத்துக்களையும் பெயரின் ஏனைய பகுதிகளுக்கான முதல் எழுத்துக்களையும் அதனைத் தொடர்ந்து வருமாறு எழுத வேண்டும்.

உதா. :- விண்ணப்பப் படிவத்தின் 1.2 இன் படி முழுப் பெயர் - MATHURATA GAMARALALAGE BUDDHIKA SARATH KUMARA GUNAWARDHANA.

விண்ணப்பப் படிவத்தின் 1.1 இல் - GUNAWARDHANA, M.G.B.S.K. என எழுத வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திககிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், மாதிரி விண்ணப்பத்தை ஒத்ததாக அமையாத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி வண்ணப்பப் படிவித்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பத்துடன் வேறு சான்றிதழ்கள் அல்லது ஆவணங்களை இணைத்து அனுப்புதல் கூடாது.

12.0.பரீட்சை நிலையங்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| குருநாகல் | 01 |
| குளியாப்பிட்டி | 02 |
| மாகோ | 03 |
| சிலாபம் | 04 |
| புத்தளம் | 05 |

**கவனிக்க :**

1. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதேனும் ஒரு நகருக்கு விண்ணப்பித்த விண்ணபதாரிகளின் எண்ணிக்கை போதுமானதாக அமையாவிட்டால், இரண்டாவது தெரிவு நகரத்திற்கு அனுப்பப்படுவதோடு, இரண்டாவது நகரத்திற்கும் போதாமல் போனால் அண்மையில் உள்ள மற்றொரு, நகரத்திற்கு அனுப்பப்படுவார். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பரீட்சை நிலையம் ஒன்றை உருவாக்குவற்குத் தேவையான விண்ணபதாரிகள் இல்லாமல் போனால் அண்மையில் உள்ள நகரத்திற்கு மாற்றப்படுவார்கள்.

2. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படுவது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலெழுத்துக்களுடனான பெயருக்கு என்பதால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியைப் பின்பற்றி தமது பெயரை சரியாகக் குறிப்பிட வேண்டும். நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அல்லது ஏதேனும் பகுதி ஒன்றை இணைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட மாட்டாது.

12.1 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.2, 40, 360/ க்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12.2 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண அரச சேவையின் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிட்டு நீர் தோற்றும் மாவட்டம் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிடவும்.

12.3 முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2017.11.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

12.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்று வதற்காக அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறலானது விண்ணப்பதாரியினால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதாக அமைய மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதைப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவைப்படும் தகைமைகள் இல்லாதவர்களின் விண்ணப்பத்தகைமை இரத்துச் செய்யப்படும்.

13.0 பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப் படும். பரீட்சை விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

13.1 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பகிரங்க பத்திரிகை விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் அனுமதிச் சீட்டு கிடைக்காத விண்ணப்பதாரிகள் அது தொடர்பில் விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை உள்ளடக்கிய வேண்டுகோள் கடிதம், பெக்ஸ் மூலம் அனுமதிப் பத்திரத்தை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு பெக்ஸ் இலக்கம் என்பவற்றை உள்ளடக்கி விளம்பரத்தில் குறிப்பிடப்படும் பெக்ஸ் இலக்கத்திற்கு பெக்ஸ் மூலம் விசாரிப்பது மிகவும் வினைத் திறனுடையதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பத்தின் பிரதி ஒன்றையும், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றையும் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பும்போது பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினையும் தயார் நிலையில் வைத்திருப்பது பயன் அளிக்கலாம்.

14.0 விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை முன்வைக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15.0 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைத்தலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைக் கொண்டுள்ளார் என்பதாகக் கருதப்படக் கூடாது.

15.1 **பரீட்சைப் பெறுபேறு** :
இந்த அறிவித்தலில் 8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் பெறுபேற்றுப் பட்டியல், செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும். அதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகளை அனுப்புதல் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exam.gov.lk வெப் தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும்.

16.0 பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவாராகின்றனர். அந்த சட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாவார்.
இந்தப் பரீட்சையை நடாத்துதல், நியமனங்களை வழங்குதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

17.0 சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் காணப்படுவதாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு (வடமேல்),
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2017, செத்தெம்பர் 28.

(இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்கள் தவறான முறையில் தயாரித்து வழங்குகின்ற அறிவித்தல்களில் உள்ள விடயங்கள் மற்றும் விண்ணப்பங்கள் குறித்து எந்தப் பொறுப்பும் ஏற்கப்பட மாட்டாது.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2017**

Open Competitive Examination for Recruitment to Class III of North Western Provincial Public Management Assistance Service - 2017

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4 (உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

- வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசிக்கின்ற நகரத்தையும் இலக்கத்தையும் குறிப்பிடுக. (பரீட்சை நிலையங்கள் உருவாக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கத்திற்கு 12.1 ஐப் பார்க்கவும்)

  (விண்ணப்பிக்கும் நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

- வெற்றிடங்களுக்காக போட்டியிடும் வர்த்தமானி அறிவித்தலின் 7.1 ஆம் பந்தியின் அடிப்படையில் உமது வதிவிட மாவட்டம்

  (உரிய மாவட்டத்தையும், மாவட்ட இலக்கத்தையும் கட்டத்தினுள் எழுதுக)
  (குருநாகல் - 01/புத்தளம் -02)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

1.0 பெயர் :

1.1. முதலெழுத்துக்களை பின்னால் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-
……………………………………………………………………………………………………………………………
(உதாரணம் : GUNAWARDHANA, H.M.S.K)

1.2. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- ……………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில்/தமிழில் ) திரு./திருமதி/செல்வி :-
……………………………………………………………………………………………………………

1.4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.0

2.1. நிரந்தர முகவரி:-……………………………………………………………………………………………

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2. நிரந்தர முகவரி :-……………………………………………………………………………………………

(சிங்களம்/தமிழில்) :-

2.3. பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :- ………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :-

3.0

3.1. பால் - பெண் - 1
ஆண் - 0 ☐

(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

3.2. பிறந்த திகதி :- ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3. 2017.11.14 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள்: ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0

4.1. மாவட்டத்தில் வசிப்பது எப்போதிருந்து:- ……………………………………………………………………

4.2. வசிக்கும் உதவி அரச அதிபர்/பிரதேச செயலாளர் பிரிவு :- ……………………………………………………

4.3. கிராம அலுவலர் பிரிவு :- ……………………………………………………………………………………

5.0 கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சை ஆண்டும் மாதமும் :- ……………………………………………………………

(ii) பரீட்சை சுட்டெண் :- ……………………………………………………………

(iii) பெறுபேறு :- ……………………………………………………………

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த (உ./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :- ……………………………………………………………

(ii) பரீட்சை சுட்டெண் :- ……………………………………………………………

(iii) பெறுபேறு :- ……………………………………………………………

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3. ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருப்பின் :-

(i) பல்கலைக்கழகம்:- ……………………………………………………………

(ii) பட்டம்:- ……………………………………………………………

(iii) பரீட்சை ஆண்டு :- ……………………………………………………………

6.0. ஏனைய தகைமைகள் :

7.0. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(உரிய கட்டத்தினுள் அடையாளம் இடுக) (ஆம் ஆயின் விபரங்களை குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரம் :

(i) செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் :- ……………………………………………………………

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :- ……………………………………………………………

(iii) செலுத்திய பணம் :- ……………………………………………………………

| |
|---|
| பற்றுச் சீட்டினை கழராதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச் சீட்டின் நிழற் படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம்) |

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவாறு உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உறுதி கூறுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) பரீட்சைக் கட்டணத்தை உரிய பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு மற்றும் பெறுபேறு வெளியிடப்படல் தொடர்பில் மேற் கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்றுவதற்கு கோரிக்கை விடுக்க மாட்டேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :……………………………………

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………………………………………………
……………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் மூலம் ……………………………… ஆந் திகதி என் முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது என்பதையும் உறுதி செய்கிறேன்.

……………………………………
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துபவரின் பெயர் | : | ………………………………… |
| பதவி | : | ………………………………… |
| முகவரி | : | ………………………………… |
| (உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்) | | |
| திகதி | : | ………………………………… |

(குறிப்பு :- விண்ணப்பத்துடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினைத் தவிர்த்து வேறு எதனையும் இணைத்து அனுப்புதல் கூடாது)

*10 - 442*